**வத்தளை பிரதேச சபை - 2022**

-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வத்தளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டிற்குரிய மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசினால் மாற்றப்பட்ட ரூபா 70,977 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருத்திய இறுதிக் கணக்களில் குறிப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது என. | நாட்குறிப்பு சரிசெய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் அகல்விரிவான வருமானம் கூற்றில் ஏனைய அகல் விரிவான வருமானம் கணிக்கும் போது மிகையில் இனங்காணப்பட்டிருந்த மூலதனச் செலவு ரூபா 70,977 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | சரியாக காட்டப்பட வேண்டும். |
| (இ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு கட்டணம் என மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 1,157,742 தொகை அகல்விரிவான வருமானக் கூற்றிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்காய்வு பில்பத்திரம் 2022 ஆண்டில் கிடைத்திருந்தமையால் 2022 ஆண்டின் செலவுத் தலைப்பின் கீழ் இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என. | அட்டுறு அடிப்படை மீது சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களின் படி இறுதி இருப்பு ரூபா 12,239,967 தொகையாக இருந்த போதிலும், அட்டவணையின் படி மீதி ரூபா 13,040,739 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 800,772 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இருப்புக் களஞ்சியக் கணக்கில் பௌதீக பெறுமதி அவ்வாறே காணப்படுகின்றது. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிலுவை வருமானம் காலப்பகுப்பாய்வின் படி வீதவரி மீதி ரூபா 88,190,603 தொகை எனினும் நிலுவை வருமான அறிக்கையின் படி மீதி ரூபா 83,978,080 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 4,212,523 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நெக்பா கணினி முறைமையின் படி மீதி மற்றும் கணக்கு ஏடுகளின் படி மீதி இடையே வித்தியாசம் ஒன்று காணப்படுகின்றது. சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | -மேற்படி- |
| (இ) | கட்டிட பேரேட்டுக் கணக்கின் படி மீதி ரூபா 460,498,734 தொகை எனினும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றின் படி மீதி ரூபா 460,016,319 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 482,415 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசம் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என. | -மேற்படி- |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் பிரிவு 24(1)ஆ | சபைக்கு சொந்தமாக காணப்பட்ட 1190 பாதைகள் வர்த்தமானியின் மூலம் வெளியிட்டு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருடாந்தம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு பாதைகளை அளவை செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளைச் சட்டம் | 61,489 ஆதனங்கள் 2008 ஆம் ஆண்டின் வீதவரி பெறுமதி மதிப்பீட்டின் படி சிட்டையிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வீதவரி பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | புதிய வீதவரி ரேட் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| 571(1) மற்றும் (2) | ரூபா 589,378 தொகை பெறுமதியான 79 வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை. | இந்த வைப்புக்களை வருமானத்திற்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இரண்டு வருடங்கள் கடந்துள்ள வைப்பு மீதிகள் ஆதனவழிப்புச் செய்யப்பட வேண்டும். |
| 371 | 2019 ஜூலை 06 திகதிய வழங்கியிருந்த ரூபா 112,420 தொகை பெறுமதியான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முற்பணத் தொகைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 263,219,162 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 120,504,997 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 94,142,100 | 105,796,333 | 107,098,725 | 83,978,079 | 96,667,178 | 96,216,178 | 84,629,100 | 85,280,471 |
| (ii) | வாடகை | 5,640,000 | 11,698,138 | 11,839,872 | 8,596,534 | 6,950,000 | 7,278,297 | 7,028,665 | 8,738,268 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,352,399 | 2,637,349 | 2,637,349 | - | 3,400,000 | 2,750,099 | 2,750,099 | - |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 765,000 | 2,518,182 | 2,518,182 | - | 1,020,000 | 3,873 | 3,873 | - |
| | | 103,899,499 | 122,650,002 | 124,094,128 | 92,574,613 | 105,037,000 | 106,248,447 | 94,411,737 | 94,018,739 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 85,280,471 தொகையில் ஆண்டின் போது ரூபா 27,760,342 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் கூடிய சதவீதமொன்று அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நிலுவை வருமான மீதியை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஆரம்பத் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 8,371,114 தொகையில் ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்ட தொகை ரூபா 3,167,419 தொகையாக இருந்தது. | -மேற்படி- | உடன்படிக்கையின் படி நிலுவை வியாபார நிலைய வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்பட்டோர் மீதி ரூபா 8,942,814 தொகையாக இருந்தது. | செயற்திட்டங்களுக்குரிய கொடுப்பனவு அறிக்கைகள் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் பணம் கிடைத்திருக்கவில்லை என. | கடன்பட்டோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 62,524,940 தொகையாக இருந்தது. | செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த தொகைகளுக்கான கொடுப்பனவு பணம் கிடைத்த பின்னரே மேற்கொள்ளப்படும் என. | கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அரச நிறுவனங்களில் இருந்து சபையின் பயன்பாட்டிற்காக கிடைத்திருந்த ரூபா.36,193,861 தொகைக்கான 06 வாகனங்கள் 2023 ஏப்ரல் 23 திகதி அளவிலும் சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | உரித்தாக்க வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, ஓய்வுபெற்றுள்ள, இறந்த, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் ஏனைய காரணங்கள் மீது 29 உத்தியோகத்தர்களிடம் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட ஊழியர் கடன்மீதி ரூபா 1,188,867 தொகையாக இருந்தது. | கடிதங்களின் மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் குறிப்பிட்ட பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை என. | ஊழியர் கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். |